**C.O.S.No.01/2022** **தேதி – 23.06.2026**

**பி.வா.சா.1. – முகம்மது அப்துல் காதர்**

**வாதி தரப்பு குறுக்கு விசாரணை –**

நான் முதல் பிரதிவாதி நிறுவனத்தில் தற்போது ஜெனரல் மேனேஜராக பணிபுரிந்து வருகிறேன் என்றால் சரிதான். எத்தனை வருடங்கள் என்றால் 15 வருடங்கள் ஆகும். மேற்படி நிறுவனத்தில் நான் பணியில் சேரும்போது எந்த பணியில் சேர்ந்தேன் என்றால் ஜெனரல் மேனேஜராகத்தான் சேர்ந்தேன். மேற்படி நிறுவனத்தின் சார்பாக நான் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன் என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் நிரூபண வாக்குமூலத்தில் நான் படித்து பார்த்துதான் கையொப்பம் செய்துள்ளேன் என்றால் சரிதான். இந்த வழக்கில் வாதி பர்கானா என்ற வர்த்தக முத்திரையை இந்தியாவில் பதிவு செய்திருப்பது எனக்கு தெரியுமா என்றால் எனக்கு தெரியாது. வாதி வர்த்தக முத்திரை பதிவு சான்றிதழை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. வாதி, பர்கானா என்ற லேபிளில் உள்ள கலைப்படைப்பிற்கு பதிப்புரிமை பெற்றுள்ளார் என்றால் அது தவறு. பதிப்புரிமை பதிவு சான்றிதழை வாதி இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ளார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. வாதி, வர்த்தக முத்திரையை பதிவு, இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்ட நாளில் செல்லுபடியாக இருந்தது என்றால் சரியல்ல. இந்த முத்திரை பதிப்புரிமை ஷா ஆலம் அப்துல்லா பின் மகபூஸ் என்ற நிறுவனத்தின் பெயரில்தான் இருந்து வருகிறது. ஷா ஆலம் அப்துல்லா பின் மகபூஸ் என்பவர் பிரதிவாதி ஆவார். வாதி அனுப்பிய சட்ட அறிவிப்பில் பதிவு விபரங்கள் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. வாதி சட்ட அறிவிப்பை அனுப்பிய பிறகுதான், வர்த்தக முத்திரை மற்றும் பதிப்புரிமை கோருகிறார் என்ற விபரம் எனக்கு தெரியுமா என்றால் எனக்கு தெரியாது. மேற்படி அறிவிப்பிற்கு பிரதிவாதியின் உரிமை என்று பதில் அறிவிப்பு அனுப்பப்பட்டது. மேற்படி சட்ட

அறிவிப்பு அனுப்பிய பிறகும், முதல் பிரதிவாதி பர்கானா என்ற பெயரை பயன்படுத்தி வந்தார் என்றால் பிரதிவாதி ஷா ஆலம் அப்துல்லா பின் மகபூஸ் என்பவர் அனுமதி கடித்தின்பேரிலேயே அவர்களுக்கு சரக்குகள் அனுப்ப பயன்படுத்தினோம். சட்ட அறிவிப்பிற்கு பிறகும், அதே பேக்கேஜில் பயன்படுத்தினோம் என்றால் சரிதான். மேற்படி சட்ட அறிவிப்பிற்கு பிறகு, பெண் உரு படம், வண்ண அமைப்பு, அதே எழுத்து பயன் படுத்தி வந்தோம் என்றால் சட்ட அறிவிப்பிற்கு முன்பே அதன் உரிமையாளரான ஷா ஆலம் அப்துல்லா பின் மகபூஸ் நிறுவனத்திலிருந்து படத்தை பெற்று உபயோகித்து வந்தோம். சட்ட அறிவிப்பிற்கு பிறகு பேக்கேஜிங்கில் எந்தவித மாற்றமும் செய்யவில்லை என்றால் சரிதான். வாதி பதிவு செல்லாது என்று கூறி இந்திய வர்த்தக முத்திரை பதிவாளர் எந்தவித உத்தரவும் பிறப்பிக்கவில்லை என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. வாதியின் பதிப்புரிமை ரத்து செய்யப்பட்டது பற்றி எந்த ஒரு ஆவணமும் நீதிமன்றத்தில் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் பிரதிவாதி ஷா ஆலம் அப்துல்லா பின் மகபூஸ் என்பவர்தான் பதிப்புரிமை பெற்றவர் ஆவார். எங்களது நிறுவனத்தின்பேரில்தான் பர்கானா என்ற வர்த்தக முத்திரைக்கு இந்தியாவில் பதிவு இல்லை என்றால் அந்த முத்திரையில் இந்தியாவில் பதிவும் இல்லை, வியாபாரமும் இல்லை, விற்பனையும் இல்லை. பர்கானா என்ற பெயரை அதனோடு தொடர்புடைய லேபிளையும், பேக்கேஜையும் பயன்படுத்தி இந்தியாவிலிருந்து ஏற்றுமதி செய்தது எங்களது நிறுவனம் என்றால் பிரதிவாதி ஷா ஆலம் அப்துல்லா பின் மகபூஸ் என்ற நிறுவனத்தின் அனுமதியின் பேரில் ஏற்றுமதி செய்தது. இந்தியாவில் இருந்து ஏற்றுமதி செய்யப்பட்ட அந்த பொருளில் பர்கானா என்ற பெயர்தான் இடம் பெற்றுள்ளது என்றால் சரிதான். பர்கானா என்ற பேக்கேஜ் இந்தியாவில்தான் தயார் செய்யப்பட்டது என்றால் பர்கானா என்ற முத்திரை உரிமையாளர் ஷா ஆலம் அப்துல்லா பின் மகபூஸ் கற்பனையில் அவருடைய இடத்திலேயே தயார் செய்யப்பட்டது ஆகும்.

பேக்கேஜிங் அச்சிடும் பணியும் இந்தியாவில்தான் மேற்கொள்ளப்பட்டது என்றால் சரிதான். அந்த பேக்கேஜை பயன்படுத்தியது எங்களது நிறுவனம்தான் என்றால் சரிதான். இந்த வழக்கில் வாதி எதிர்ப்பு தெரிவித்த பின்னரும், பேக்கேஜிங்கை நாங்கள் பயன்படுத்தி வந்தோம் என்றால் உரிமையாளரின் அனுமதியின்பேரிலேயே நாங்கள் பயன்படுத்தி வந்தோம். நாங்கள் பர்கானா என்ற வர்த்தக முத்திரையை இந்தியாவில் எந்த இடத்திலும் பதிவு செய்யவில்லை என்றால் சரிதான். பதிவு செய்யவும் இல்லை, விற்பனை செய்யவும் இல்லை. உரிமையாளரின் அனுமதியின் பேரில் ஏற்றுமதி மட்டும் செய்தோம். இந்தியாவில் பர்கானா என்ற பெயரை பயன்படுத்துவதற்கு உரிமம் வழங்கப்பட்டதாக எந்த பதிவு செய்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. உரிமையாளரின் அனுமதி கடிதம் தாக்கல் செய்துள்ளோம். லேபிளில் உள்ள பெண் உருவ படத்தை பயன்படுத்துவதற்கு வாதியிடம் எந்தவித அனுமதியும் பெற்றிருந்தார் என்றால் வாதியை எனக்கு தெரியாது. அதன் உரிமையாளரான பிரதிவாதியிடம் அனுமதி பெற்றிருந்தோம். எங்களது பேக்கேஜிங்கில் பயன்படுத்தப்பட்ட பர்கானா என்ற வர்த்தகத்தை வாதியின் பேக்கேஜில் பயன்படுத்தப்பட்ட அதே வார்த்தைதான் என்றால் வாதி பயன்டுத்தியது எங்களுக்கு தெரியாது. பர்கானா என்ற பெயரை மாற்றி வேறு பெயரில் ஏலக்காய் விற்பனை செய்வதற்கு எங்களது நிறுவனத்திற்கு எந்த தடையும் இல்லை என்றால் சரிதான். எங்களது நிறுவனம்தான் பர்கானா என்ற பெயரை பயன்படுத்த முடிவு செய்துள்ளது என்றால் தவறு. உரிமையாளர் அனுமதியின் பேரிலேயே பயன்படுத்தப்பட்டு வருகிறது. வேறு வண்ண அமைப்பு, வேறு லேபிள், வேறு பெண் உருவம் ஆகியவற்றை பயன்படுத்தி ஏலக்காய் ஏற்றுமதி செய்ய முடியும் என்றால் எனக்கு தெரியாது. அது உரிமையாளரின் உரிமை ஆகும். பேக்கேஜ் வடிவமைக்கு சுயமாக உருவாக்கப்பட்டது என்பதை நிரூபிக்கும் எந்தவித

ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் உரிமையாளரின் அனுமதி கடிதம் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**வாதி தரப்பு வழக்கறிஞர் கேட்டுக்கொண்டதற்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சி வேறொரு தேதிக்கு ஒத்தி வைக்கப்படுகிறது.**

என்னால் திறந்த நீதிமன்றத்தில் பதிவு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு சரி என்று ஒப்புக்காள்ளப்பட்டது.

முதன்மை மாவட்ட நீதிபதி,
ஸ்ரீவில்லிபுத்தூர்.